MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 12-09-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | பிலவ வருடம் (ஆவணி 27) | வருட சந்தா ₹ 200<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 58 | இதழ் 33<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர் : பேருள்பணி ஆ.அருளானந்தம்<br>துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ் |
|---|---|---|---|---|


## கிறிஸ்துவில் ஏற்புடையவர் ஆதலில் அகமகிழுங்கள்



கடந்த புதன் 01.09.2021 அன்று, புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய மடலின் 3ம் பிரிவிலிருந்து ஒரு பகுதியானது பல்வேறு மொழிகளில் முதலில் வாசிக்கப்பட்டது. பின்னர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறைக்கல்வியுரையைத் துவக்கினார்.

"அன்புச் சகோதரர்களே, சகோதரிகளே, கிறிஸ்துவில் நம் வாழ்வு புதியதாய் அமைய வேண்டும் என புனித பவுல் வலியுறுத்தியுள்ளதை மறைக்கல்வியுரைகளில் நாம் சிந்தித்து வருகிறோம். அத்தகைய வாழ்வானது, கட்டளைகளை நுணுக்கமாய்ப் பின்பற்றுவதை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சமய உணர்விலிருந்து கிறிஸ்தவர்களை விடுதலையாக்குகிறது. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்ப்பின் நற்செய்தியில் கலாத்தியர்கள் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் அவர்கள் மத்தியில் தூய ஆவியார் அபரிவிதமாய்ப் பொழியப்பட்டதில் கிடைத்த அனுபவம் ஆகியவை வழியாக, அவர்கள் பெற்றுக்கொண்ட மீட்பளிக்கும் அருள்பற்றி புனித பவுல் அவர்களுக்கு நினைவுப் படுத்துகிறார். அதோடு, சிலுவையில் அறையுண்ட இயேசுவில் வைத்த நம்பிக்கையால், அருள் மற்றும் விடுதலையை தான் அனுபவித்தது பற்றியும் பவுல் அத்திருமடலில் பதிவுசெய்துள்ளார். "இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில், நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்புகூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்" -கலா 2:20. திருத்தூதர் பவுல் கலாத்தியருக்குக் கூறியது போல நம்மிடமும் இன்று அவர் பேசுகிறார். கிறிஸ்துவில் நாம் பெற்றுக்கொண்ட நம்பிக்கை வழியாக, ஏற்புடையவர் ஆதலில் அகமகிழவும், நம் அன்றாட வாழ்வில், கடவுளின் இரக்கமுள்ள அன்பிற்கு உறுதியுடன் சான்று பகரவும், அவர் நமக்கு அழைப்பு விடுக்கிறார்."

இவ்வாறு, கடந்த புதன் மறைக்கல்வியுரையை நிறைவு செய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நிகழ்வில் பங்குக்கொண்டோர் மீதும், அவர்களின் குடும்பங்கள் மீதும், கிறிஸ்துவின் மகிழ்வும் அமைதியும் நிரப்பப்பட செபித்து தன் அப்போஸ்தலிக்க ஆசிரை அளித்தார்.

## அமைதிக்குரிய அர்ப்பணம், இக்காலத்திற்கு அதிகம் தேவை

செப்டம்பர் 4 சனிக்கிழமை காலையில், திருப்பீடத்தில் தன்னை சந்திக்க வந்திருந்த "அமைதிக்காக தலைவர்கள்" (Learders for Peace) என்ற உலகளாவிய அமைப்பின் 16 பிரதிநிதிகளுக்கு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கோவிட் -19 பெருந்தொற்று அனைவரிலும், குறிப்பாக, ஏழைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை எடுத்துரைத்தார். இன்றைய சமுதாயத்தில் நிலவும் முக்கிய பிரச்சனைகளைக் களைவதற்கு, ஆட்சியாளர்களுக்கும், குடிமக்களுக்கும் உதவ வேண்டிய சவாலை, இந்த அமைப்பினர் எதிர்கொள்கின்றனர். பிரச்சனைகளின் அடிப்படை காரணங்கள் பற்றி தெளிவை உருவாக்குவதன் வழியாக, சமுதாய மற்றும் அரசியல் வாழ்வில் முக்கிய பங்காற்ற முடியும் என்று திருத்தந்தை அவர்கள் கூறினார்.

இந்த அமைப்பினருக்கு மிகவும் விருப்பமான அமைதி பற்றி மக்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு இதுவும் ஒரு வழியாகும். பெருந்தொற்று காலத்தில் இடம்பெற்ற நீண்டகால தனிமை மற்றும் சமூகப் பதட்டநிலை பற்றியும் அக்காலம் முடிவுற்ற பின்னர் மேற்கொள்ள வேண்டிய அரசியல் செயல்திட்டங்கள் பற்றியும் திருத்தந்தை கூறினார். பெருந்தொற்று முடிவுற்ற காலம், சிறந்த அரசியலை ஊக்குவிப்பதற்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும், சிறந்த அரசியல் இன்றி உலகம் என்ற குழுமத்தில் மக்களும் நாடுகளும் சமுதாய நட்புறவில் வாழத்தூண்டும் உடன்பிறப்பு உணர்வை எட்ட இயலாது. உலகில் அமைதியைக் கட்டியெழுப்பும் பணியில், எவரும் ஒதுக்கப்படாமல் எல்லாரையும் கைவினைஞர்களாக ஈடுபடுத்தவது அவசியம். இப்பணி, கலாச்சாரம் மற்றும் நிறுவனம் ஆகிய இரு நிலைகளில் இடம்பெற வேண்டும்.

புண்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் இருக்கும் மனிதரின் மாண்பு மற்றும் அவர்களின் வரலாற்றை மதிக்கும் கலாச்சாரமும் நம் சகோதரர் சகோதரிகளுக்குச் செவிமடுத்து அவர்களை வரவேற்று, அவர்களில் நம்பிக்கையை ஏற்படுத்தும் சந்திப்புக் கலாச்சாரமும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

நிறுவனங்களைப் பொறுத்தவரை, உரையாடலும் பல்முனை ஒத்துழைப்பும் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்றும், இவையனைத்துமே துன்புறும் மக்களுக்கு உதவுகின்ற செயல்களில் வெளிப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்த திருத்தந்தை இந்த அமைப்பினரின் பணிக்கு நன்றி தெரிவித்து அவர்களை ஊக்கப்படுத்தினார்.

ஆசிரியர் பேனா...

# சமயம் – சமுதாயம் – கல்வி

**பக்தி இயக்கங்கள்:** "பக்தி இயக்கத்தின் சமூகப் புரட்சி இல்லாது இந்தியாவின் நிலை மற்றும் அமைப்பை கற்பனை செய்வது கடினமாக உள்ளது என்று அறிஞர்கள் இன்றைக்குக் கூறுகின்றனர். நம்பிக்கை, சமூக படிநிலைகள் மற்றும் வசதிகள் ஆகிய பாகுபாடுகளைக் களைந்து படைப்புக்களை இறைவனுடன் பக்தி இணைந்தது." (தினமணி, 2 செப். 2021, இந்திய ஞானத்தால் உலகம் பயனடைய வேண்டும்) பிரதமரின் இக்கருத்து ஏற்புடையதே.

சமூகப் படிநிலைகளை உறுதியாக கட்டி எழுப்பிய இந்து சனாதன தர்மத்தை கைவிட்டு, சமயத்தை தூய்மைபடுத்தும் முயற்சியாக பக்தி இயக்கங்கள் தோன்றின. டாக்டர் அம்பேத்கர் பௌத்தத்தை தழுவியதும், விவேகானந்தர் சிக்காகோ மாநாட்டில் "சகோதரிகளே, சகோதரர்களே" என்று தன் உரையை ஆரம்பித்ததும், சமூக படிநிலைகளைக் கடந்து எல்லா மக்களும் அன்புச் சமூகமாக வாழ்ந்து அமைதியை அனுபவிக்க கொடுக்கபட்ட அழைப்பாகக் கருதலாம்.

இந்தியாவின் சீர்திருத்த தந்தை (Father of Indian Renaissance) என்று அழைக்கப்படுபவர் திரு. ராஜாராம் மோகன்ராய். இந்தியாவில் விரவிக்கிடந்த சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராடியவர். அதற்காகவே பிரம்ம சமாஜ் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். இவரைப் போலவே சமயத்தின் பெயரால் சமுதாயத்தில் கடைபிடிக்கப்பட்ட சமூக அநீதிகளுக்கு எதிராக பலர் போராடினர்.

உடன்கட்டை ஏறுதல் என்பதற்கு பதில் விதவை மறுமணம், கீழ்சாதியினர் ஆலய தரிசனம், பெண்கள் உரிமை, குழந்தை திருமண மறுப்பு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற சமுதாய வளர்ச்சிக்கு சமய சீர்திருத்தம் தேவைப்பட்டது. சமய சீர்திருத்த தந்தையரின் போராட்டத்தின் பலனை இன்றைய சமுதாயம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

**பயங்கரவாதம்:** சமத்துவச் சமுதாயத்தையும், சமய சுதந்திரத்தையும் இந்தியா போற்றி ஏற்றுக் கொண்டது. இந்தியா சமய சார்பற்ற நாடு என்று தன்னை பெருமையோடு அடையாளப் படுத்திக் கொண்டது. அரசியல் சுதந்திரம் பெற்ற ஒருநாடு, சமுதாய சமத்துவத்தையும், சமய சுதந்திரத்தையும் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதைவிட பயங்கரவாதம் எதுவும் இருக்க முடியாது. சமுதாயத்தின் ஒரு பிரிவினரையோ, ஒரு சமயத்தையோ சார்ந்து மற்றவரைப் புறக்கணிப்பது எவ்வளவு கொடுமை என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. ஆப்கானிஸ்தானின் அண்மைக்கால வரலாறும், தற்போதைய நிகழ்வுகளும் நம் கண்முன் நிற்கின்ற சான்று. தூய்மையான மனச்சாட்சியை உருவாக்கி சமுதாயத்தில் 'அன்புற', 'அமைதி', 'நீதி'யை நிலைநாட்டும் வாழ்க்கை நெறியாக சமயம் செயல்பட வேண்டும் என்பதை சமயச் சீர்திருத்த இயக்கங்கள் நினைவூட்டுகின்றன.

இன்று சமயம் சாரம் இழந்து விட்டதோ? என்ற ஐயம் ஏற்படுகின்றது. நாடு வல்லரசாக வேண்டும் என்ற இலக்கை நோக்கி ஒன்றிய அரசு நம்மை வழிநடத்துகிறது. பொருளாதார, இராணுவ வ–மையை நோக்கிய பயணம், சமுதாயத்தில் ஏற்படுத்தும் எதிர்மறை பாதகங்களை கண்டு கொள்ளாமல் இருக்கும் என்றால் அது நாட்டுக்கு நன்மை பயக்காது. தானிய கையிருப்பு மிகுதியாக இருந்தும் ஏழ்மையும், பட்டினியும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஏழை செல்வந்தர் இடைவெளி விரிந்து கொண்டே போகிறது. வேற்று மதத்தவரை வெறுக்கத் தூண்டும் பேச்சு நஞ்சாக மக்கள் மத்தியிலே நோய்க் கிருமியாக பிரவுகிறது. சிறுபான்மை மதத்தினருக்கும் த–த்துக்கள், பழங்குடியினருக்கும் எதிரான செயல்பாடுகள் நாட்டின் வளர்ச்சிக்கு சவாலாக இருக்கின்றன. (16-22, Aug, 2021, Indian Currents, Jacob Peanika Parambal, `State of thenation in Modi Eva) (தினமணி 2 செப் 2021, சுத்தி சடங்கு பூஜை செய்ய கோயில்களில் சிறப்பு அலுவலர்கள்) சமயத்தின் பெயரால் வெறுப்பையும், வளர்ச்சியின் பெயரால் ஏழ்மையையும் வளர விடுவது நாட்டின் நலனுக்கு கேடாகாதா? இதனை ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் புரிந்து செயல்படுவது அவசியம்.

**சமய பணி:** மக்கள் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு உண்மையான இறை நம்பிக்கை கொண்டவர்களாக நல்லவை நினைப்பவர்களாகவும் பிறர்க்கு தீங்கிழைப்பதை தவிர்ப்பவர்களாகவும் வாழ பழகிட வேண்டும். சமயங்கள் போதிக்கின்ற நீதி நெறிகளையும், தர்மச் செயல்களையும் மக்கள் மனத்தில் இருத்தினால் சமுதாயத்தில் அமைதியும், வளர்ச்சியும் ஏற்படும். "உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள், உங்கள் தீச் செயல்களை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள், தீமை செய்வதை விட்டொழியுங்கள். நன்மைசெய்யக் கற்றுக்கொள்ளுங்கள், நீதியை நாடித் தேடுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள், திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள், கைம் பெண்ணுக்காக வாதாடுங்கள்" (எசா 1:16–17). இத்தகைய செயல்களைத் தவிர்த்து, விழாக்கள், தேரோட்டங்கள், யாத்திரைகள் செய்வது பயனற்றது. சமயம் சமுதாயத்தை கட்டி எழுப்ப உதவிட வேண்டும், மனிதரை நற் பண்பாளர்களாக மாற்றவேண்டும்.

**கல்விப் பணி:** இந்த சமயப் பணியின் வேறு பெயர் கல்விப் பணி. மனத்தின் அறியாமை மாசகற்றி அறிவொளி ஏற்றுவது கல்வி. அந்த அறிவொளியிலே உண்மை வாழ்வை கண்டுகொள்ள கல்வி வழிநடத்தும். உண்மை வாழ்வு என்பது உன்னைப் போல் அடுத்த மனிதரையும் மதித்து நடத்தும் பண்பு என்பதை கல்விச் சொல்–த்தரும். மனிதனை நற்பண்பாளனாக, உயிருள்ள சிற்பமாக வடித்தெடுப்பது கல்வி. மனித இதயத்தில் புதைந்து கிடக்கும் நல்முத்துக்களை தோண்டி எடுத்து சமுதாயத்தை செழிக்கச் செய்வது கல்வி. அறவாழ்வுக்கு பாதை அமைத்து தருவது கல்வி. கல்விக் கண் திறந்து விடுபவர் ஆசான் (அ) ஆசிரியர். ஆசிரியர் என்றால் மனத்தின் கறை நீக்குபவர் என்பது பொருள். அதனால் ஆசிரியரை தெய்வமாக அன்றைய சமுதாயம் மதித்தது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5ம் தேதி ஆசிரியர் தினத்தை கொண்டாடினால் போதாது. ஆசிரியரை மதிக்கின்ற பண்பு மாணவரிடமும், மக்களிடமும் வளர்ந்திட வேண்டும்.

**இன்றைய கல்வி:** இன்றைய கல்வி திறமையான தொழிலாளர்களை வார்த்தெடுக்கின்ற ஒன்றாக அமைந்துவிட்டது வேதனைக்குரியது. மிகுந்த பணம் (செல்வம்) ஈட்டுவதே கல்வியின் பயன் என தவறான புரிதல் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு விட்டது. இது மக்கள் மத்தியிலே நுகர்வு மனப்பான்மையை வளர்த்துவிட்டது. அதன் பாதகத்தை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சிந்தித்து நற்செயலாற்ற மனிதருக்கு பதில் நாளைய மனிதன் அறிவு செறிவூட்டப்பட்ட எந்திரமாக மாறும் ஆபத்து உள்ளது.

**நம் பணி:** நல்–ணக்கமும், அமைதியும் அனுபவிக்கும் சமுதாயம் படைக்கப்பட வேண்டும். அதற்கு சமயங்கள் மனித மனத்தை பண்படுத்தும் பணியை தொடர்ந்திட இருக்கும் தடைகள் களையப்படுவது அவசியம். பண்புடைய மனிதரை உருவாக்கும் கல்வி அனைவருக்கும் வசப்பட நாம் செயல்படுவது காலத்தின் கட்டாயம். நல்ல சமுதாயம் படைப்போம், சமய ஒற்றுமை காப்போம்.



19-09-2021

# தலைமைத்துவம்

அருள்திரு. S. ஜான்சன்
உதவி பங்குத்தந்தை, முகையூர்.



**I சா.ஞா 2:17-20  II யாக் 3:16-4:3 மாற்கு 9:30-37**

இறையேசுவில் பிரியமானவர்களே!

1979 ஆம் ஆண்டு, மறைந்த மதிப்பிற்குரிய முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் (முன்னாள் ஜனாதிபதி அவர்கள், SLV-3 செயற்கை கோள் உருவாக்கத்திற்கும், விண்ணில் ஏவப்படுவதற்கும் திட்ட இயக்குனராக இருந்தபொழுது, அந்த செயற்கைகோள் விண்ணில் ஏவப்பட்டபோது தோல்வியில் முடிந்து, வெடித்துச் சிதறியது. பல கோடி ரூபாய் காற்றில் சாம்பலாக பறந்தன. அச்சமயம் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) தலைவராக இருந்த மதிப்பிற்குரிய சதீஷ் தவான் (1972-1984) என்பவருடன் மதிப்பிற்குரிய அப்துல் கலாம் அய்யா அவர்களும், வெளியே பல விதமான விமர்சன கேள்விகளோடு காத்திருந்த பத்திரிக்கை யாளர்களை சந்திக்க சென்றனர். அப்பொழுது, இந்த தோல்விக்கு காரணம் என்ன? யார் பொறுப்பு? மக்களின் வரிப்பணத்திற்கு பதில் கூறுங்கள்? என்றெல்லாம் அவர்களைப் பார்த்து கேட்டனர். நானே தோல்விக்கு காரணம் என்று முழு பொறுப்பையும், பழிப்புரைகளையும் ஏற்றுக் கொண்டார் தலைவர் சதீஷ் தவான். அடுத்த வருடம் ஜுலை 18, 1980 ஆண்டு, SLV-3E2 என்ற செயற்கை கோள் விண்ணில் வெற்றிகரமாக அதே குழுவினரால், ஏவப்பட்டது. அப்பொழுது சதீஷ் தவான் அய்யா அவர்கள், அப்துல் கலாம் அய்யாவைப் பார்த்து, இப்பொழுது நீங்கள் சென்று பத்திரிக்கையாளர் சந்திப்பில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறி அவரை வாழ்த்தினார். தலைவர் என்பவர் வெற்றிகளை கொண்டாடுபவர் மட்டுமல்ல, தோல்விகளையும், அவமானங்களையும், பழிப்புரைகளையும் தன் குழுவினர் (அ) பணியாளர்கள் சார்பாக, தனதாக்கி பிறரை ஒருசேர வழிநடத்துபவர். இன்றைய வாசகங்கள் நமக்கு கற்றுத்தரும் பாடங்களும் இதைத்தான். தலைவர் என்பவர், பிறரை வழிநடத்தக்கூடிய பொறுப்பில் உள்ளவர்கள், கிறிஸ்துவ மதிப்பீடுகளின்படி, எப்படி இருக்க வேண்டும் என்ற நெறிமுறைகளை தருகின்றன.

**யார் பெரியவர்?** தலைவர்களாக பிறரை வழிநடத்தக்கூடிய பொறுப்பில் உள்ளவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் என அனைவரின் உள்ளத்திலும் இயல்பாக எழக்கூடிய கேள்வி, யார் பெரியவர்? வயதின், அனுபவத்தின் உயர்த்தப்பட்ட பொறுப்பு மற்றும் பணியின் அடிப்படையிலும் இக்கேள்வியே மையாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில், மக்கள் பாபேல் கோபுரம் கட்ட முன்வந்தது, யோசேப்பின் சகோதரர்கள் அவரை பிற இனத்தவரிடம் விற்றது, பாரவோன் இஸ்ரயேல் மக்களை அடிமைப்படுத்தியது, சவுல் தாவீது மேல் பொறாமை கொண்டு அழிக்க நினைத்தது என விவி-ய வரலாற்றிலும், நாடுகள் ஒன்றோடொன்று சண்டையிட்டு கொள்வதிலும், திருமண வாழ்வில் நடக்கக்கூடிய சின்ன சின்ன சண்டைகள் வரை யார் பெரியவர்? என்ற கேள்வியே பின்புலமாக இருக்கிறது. இக்கேள்வியைத்தான், இன்றைய இரண்டாம் வாசகத்தில் யாக்கோபு "சிற்றின்ப நாட்டம்" என சுட்டிக்காட்டுகின்றார். மேலுமாக பலவிதமான எதிர்மறை உணர்வுகளையும் பட்டிய-டுகிறார் "பொறாமை" "கட்சி மனப்பான்மை", "குழப்பம்", "கொடுஞ்செயல்கள்" "சண்டை சச்சரவுகள்", "கொலை" "பேராசை". சிற்றின்பாம என்பது உடல் சார்ந்த பா-யல் வேட்கை மட்டுமல்ல, மாறாக அதிகாரத்தையும், வழிநடத்தும் பொறுப்பையும், பணியையும் தவறாக பயன்படுத்துவதும், தங்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்துகொள்வதும்தான்.

**சீடர்களின் கேள்வி:** இயேசுவும், சீடர்களும் கப்பர்நாகூமிற்கு வருகின்றார்கள். பல சீடர்களின் சொந்த ஊரும் அதுதான். நம்மில் பலரை போன்று, சொந்த ஊருக்கு வருவதால் என்னவோ, சீடர்களும் தங்களுள் யார் பெரியவர்? யார் முதன்மைபடுத்தப்பட வேண்டும்? என்பன போன்ற சிற்றின்ப கேள்விகளை கேட்டுக்கொண்டும் இயேசு வழி நடக்க அவர்களோடு பேசி வந்ததை காதில் போட்டு கொள்ளாமலும் வருகிறார்கள். பலரும், சொந்த ஊரில் நான், நாம் பெரியவர்கள் - அந்தஸ்தில், பொருளாதாரத்தில், வாழ்வியல் முறையில் என்று பிறரை தாழ்வாக கருதும் நோக்கில்தான் நுழைகின்றனர். தங்களது அடையாளத்தையும், தகுதியையும் பற்றி பேசிகொண்டிருந்த சீடர்களுக்கு யார் பெரியவர்? என்ற பாடத்தை கறிபிக்கிறார் இயேசு.

**விண்ணரசில் பெரியவர்:** இயேசுவின் போதனைகளும், அவரது எடுத்துக்காட்டான, நேர்த்தியான வாழ்வும் ஒரு மாற்று சிந்தனையை, மாற்று நம்பிக்கையை விதைத்து கொண்டே இருந்தன. இம்மண்ணகத்தில் தனது புண்களை நாய்களுக்கு உணவாக அளித்த இலாசருக்கு, விண்ணகத்தில் ஆபிரகாமின் மடி, ஏழையர்களுக்கு அங்கே பேறுபெற்ற நிலை வலப்புறமும் இடம் கேட்ட தன் சீடர்களுக்கு அது என் தந்தையின் விருப்பம் என்ற பதில். ஆனால் மனமாறிய கள்வனுக்கு, உடனடி இடம் தம் அரசைவையில், 10-ல் 1 போனால் என்ன? ஒன்பது இருக்கின்றதே என்று சமரசம் செய்து கொள்ளும் மனிதர்களுக்கிடையே 100 ஆடுகளில் தொலைந்து போன ஒரு ஆட்டைத் தேடிச் செல்லும் நல்ல ஆயர் என எப்பொழுதுமே மாற்று நம்பிக்கையையும், சிந்தனையையும் எடுத்துரைத்தார் இயேசு. அது போலவே, தலைவர், பெரியவர், முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பவர்கள் எல்லாம் பணிவிடை பெறுவதுதான் தலைமைத்துவம் என்ற எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் மத்தியில் "பணிவிடை பெறுவதல்ல, பணிவிடை புரிவதுதான் தலைமைத்துவம்" என்று புரட்டிபோடுகிறார். இவ்வாறு, இயேசு சுட்டிக்காட்டும் முதன்மை நிலைக்கு என்னையே தாழ்த்த தடையாக உள்ள காரணிகள் எவை? சிந்திப்போம். தாழ்த்திக் கொள்வதே தலைமைத்துவம்! வீழ்த்துவதல்ல.

**மிஷன் அச்சக வெளியீடுகள்**

**புதிய புத்தகங்கள் தற்போது விற்பனையில் உள்ளன**

வியாபி வழி வாழ்வு - ரூ. 95.00
இயேசு வழி இறைவன் - ரூ. 200.00
ஞான வாழ்வு - அச்சில்
ஆசிரியர் : **சுவாமி ஆ.லூயிஸ்**

# தனிப்பெரும் சேவகி

**(அன்னை தெரேசாவின் அதிசய வரலாறு)**

- டாக்டர் **தீபக் தாமஸ்,** பல் மருத்துவர், புதுவை.

**(வெளியீடு: நெய்தல்வெளி, நாகர்கோவில்)**



**ஆ**கஸ்டு 26, 1910
அன்று
இவற்றுள் ஒன்று
நிச்சயம்
நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஒன்று

புண்ணாலும்
புறக்கணிப்பாலும்
பெருவேதனையுற்ற
குஷ்டரோகி ஒருவன்
கடவுளே கேட்கும்மளவு
கதறியிருக்க வேண்டும்.

அல்லது

தனிமைப் பாலைவனத்தில்
தவித்துக் கிடந்த
நோய்முற்றிய
கிழவியொருத்தி
இறப்பாவது இனி
நிம்மதியாய் கிட்டுமா என
படைத்தவனின் மனமிரங்க
பரிதவித்து
வேண்டியிருக்க வேண்டும்.



அல்லது

கடவுளும் சாத்தானும்

எந்நேரமும்
ஆடிக் கொண்டிருக்கும்
சதுரங்க ஆட்டத்தில்
கடவுள் தன் சிப்பாயை
கடைசி வரை நகர்த்தி
காவு வாங்கப்பட்டிருந்த
தன் வல்லமை மிக்க
ராணியை மீட்டிருக்க வேண்டும்

இவற்றுள்
ஏதோ ஒன்று
அன்று
நிச்சயம்
நடந்திருக்க வேண்டும்.

இல்லையில்லை,

இவை
அனைத்துமே
அன்று
நிச்சயம்
நடந்திருக்க வேண்டும்.

அதனால் தான்
அவள்
அன்று பிறந்தாள்.

வேதனையுற்றவர்களின்
இரட்சகராய்!
வாழ வழியற்றவர்களின்
மீட்பராய்

தந்தையின் பெயர்
நிகோலா பொஜாக்ஸ்யூ.
தாயின் பெயர்
திரானா பொஜாக்ஸ்யூ.
ஏற்கனவே
இரு பிள்ளைகள்

அவர்களுக்கு.
'லாசர்' என்றொரு
ஆண்பிள்ளை,
'அகா' என்றொரு
பெண்பிள்ளை
மூன்றாவதாய்
இந்த
முத்துப்பிள்ளை பிறந்தது.

முத்துப்பிள்ளைக்கு
முத்தாய்
ஒரு பெயரும்
இட்டார்கள்
ஆக்னஸ் கோன்ஸா பொஜாக்ஸ்யு
என.

என்ன
தடுமாறாமல் படித்தீர்களா
தவப்புதல்வியின் பெயரை.

இப்பெயருக்கு அர்த்தம்
மலரும் மொட்டு
என்பது.
உண்மை தானே.

தொடரும்

**புனித அன்னை தெரேசாவே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**



# அர்ப்பண நேயம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

மனித நேயம் எல்லாருக்கும் உரியது. கிறிஸ்தவ நேயம் கிறிஸ்தவர்கட்கு உரியது. அர்ப்பண நேயம் அனைவருக்கும் உரியது. பதினெட்டு நிறைவானப் பிறகு ஒவ்வொருவரும் இல்லறத்திலோ, துறவறத்திலோ, தன்னறத்திலோ மற்றவர்களுக்காக வாழ்வதே வாழ்வின் நெறி, இயேசுவின் நெறி, கடவுளின் நெறி, படைப்பின் நெறி. இத்தகைய வாழ்வுக்குப் பகைவன் வெளியில் இல்லை, ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதை எதார்த்தத்தோடு அனைவரும் உணர்வது முக்கியம். சுயநலம் என்பதற்கு யாருக்கும் இவ்வுலகிலும் மறு உலகிலும் இல்லை. யாரும் விரும்பாத நரகத்தில் சுயநலம் பற்றி எரிவதை இதயத்தில் உணர இயலும். தன்னையே முழுவதுமாகப் புரிந்து நம்பிக்கையோடு பொருள்மிகு கனிமிகு வாழ்வைக் கொண்டாடுவோம்.

**பகைவன் :** ஒருவருக்குப் பகைவன் வெளியில் இல்லை, தனக்குள் இருப்பதையே அருள்வாக்கு நமக்கு தெளிவுபடுத்துகிறது. உனக்குப் பகைவன் உன் வீட்டிலுள்ளதைப் புரிந்து கொள்வோம். முதற்பெற்றோர் புரிந்த பாவத்தைதான் நாமும் இப்பொழுது தொடர்ந்து புரிந்து வருகிறோம். ஆவியான கடவுளின் தூண்டுதலை விட உணர்வுகளும் உள்ளமும் கூறுகின்ற கதைகளையே கடைபிடித்து நொந்து விடுகின்றோம், அனுபவத்தி–ருந்தும் நாம் கற்றுக்கொள்வதில்லை. அலகைதான் நம்மை நயவஞ்சகமாக வலையில் வளைத்து விளையாடுகிறது. நாமும் அதற்கு உணர்ந்தோ உணராமலோ உடன்பட்டு வருகிறோம். ஒருவருக்குள் இருக்கும் தீய ஆவி ஒருவரை வாழ்வதுபோல் நடித்துக்காட்டி நரகத்தை நோக்கி நம்மை பாசத்தோடு அழைத்துச் செல்கிறது. பணக்காரன் – லாசர் உவமை உணர்த்தும் பாடத்தைப் புரிந்து வாழ்வோம்.

**இயேசு :** மனித குலத்தின் மீது கடவுள் வைத்திருக்கும் அன்பின் உச்சக்கட்டம்தான் தனது மகனையே நமக்கு ஆவியில் வழங்கி வருகிறார். இயேசுவின் பிறப்பு முதல் இறுதியில் தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் வரை இயேசு வாழ்வின் முறையை, நெறியை வழங்கி வருகிறார், இதைத்தான் தாய் திருச்சபை நமக்கு வழிகாட்டி வருகிறது என்று திருச்சபையை நம்பி வாழ்வோம்.

இயேசுவிடம் இருந்த மனநிலையை அணிந்து கொள்ளுங்கள் என்று பவுலடியார் மிக நேர்த்தியாக திருமுகங்கள் வழியாக, தனது வாழ்வு, பணி வழியாக நமக்கு வழிகாட்டுகிறார். நமக்கு இயேசு ஒருவர் இருந்தால் போதும். அவர் அனைத்தையும் கண்காணித்துக்கொள்வார் என்று புனிதர்கள், வேதசாட்சிகள், பெற்றோர்கள், நல்லவர்கள் வழியாக நம்மை வழிநடத்தி வருவதைப் பணிவோடு ஏற்றுக்கொள்வோம்.

**சரணம் :** ஒருவரின் பக்திப் பாதையில் இறுதியாக இடம் பெறுவது சரணமாகும். எனவே தான் இயேசு கடவுளின் திருவுளத் திட்டத்தை நூற்றுக்கு நூறு கடைபிடித்து வாழ்ந்து, இறந்து, உயிர்த்து நமக்கு வழி காட்டுகிறார். இந்நிலையை கடமைக்கு, சுயநலனுக்கு என்று ஓரளவு கடைபிடிக்காது முற்றிலும் அவரைப் போல சரணம் அடைந்து வாழ்ந்தால் வாழ்வின் முழுமையை அனுபவிக்க இயலும்.

சரணடைவதற்கு ஓரளவு ஞானம் இருந்தால்போதும்; சரணடைவதற்கு அன்புதான் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவேதான் இயேசுவும் ஒரே ஒரு கட்டளையை நமக்கு வழங்கி வருகிறார். என்னைப்போல அன்பு செய் என்பதாகும். அன்னை மரியாளைப் போல, "இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும்" என்று அற்புதமாக ஆவிக்கும் இயேசுவுக்கும் மாதா பணிவதின் ஆழத்தை உணர்ந்து உண்மையான அன்னை பக்தியை நம்மில் ஆதாயத்திற்கு அல்ல இழப்பதற்கு உடன்படுவோம்.

**அர்ப்பணம் :** கடவுள் தனக்கென வாழாது தன்னை முழுவதும் படைப்பிற்கும். மனித குலத்திற்கும் அளிக்கின்றார். எனவே நாம் அவருடைய பிள்ளைகள் என்பதால் நாமும் அவரைப்போல அர்ப்பணிப்பதே அர்த்தமுள்ளதாகும். நம்மிடம் இருக்கும் ஆசீரும் சவாலும் கடவுள் அருளும் சுதந்திரமாகும். கடவுள் என்றுமே கட்டாயப்படுத்தமாட்டார். தங்களுக்குத் தாங்கள் உதவுவதுபோல் கடவுள் உதவி செய்கின்றார். தான், தனது என்ற அகங்காரம்தான் நமக்குப் பெரும் தடைக்கற்களாக உள்ளன. இதைப்புரிந்து உணர்ந்து வாழத்தான் கடவுள் தன் மகனையே நமக்கு வழிகாட்டியாக அளித்து வருகிறார்.

கடவுளைப்போல, இயேசுவைப்போல நம்மை நாம் அர்ப்பணிப்பதில்தான் பொருள்மிகு அருள் வாழ்வு உண்டு. இதைத்தான் நாம் இல்லறவாழ்விலும், துறவற வாழ்விலும் அர்ப்பணித்து வாழ அன்றாடம் அவர் அருளால் முயன்று வருகின்றோம். இத்தகைய அர்ப்பணம் தன்னையும் அயலானையும் இறைவனையும் ஒருங்கிணைத்து வாழ பெரிதும் உதவுகின்றது. இத்தகைய வாழ்வை நிறைவாக வாழ அன்னை மரியாளும் இயேசுவும் நமக்குக் கடவுள் கொடுத்துவரும் அருள் அடையாளங்களாகும். எனவே இறைவனைப் புகழ்ந்து நன்றி கூறுவோம்.

**நேயம் :** மனித நேயத்தின் சிறப்பான வெளிப்பாடு கிறிஸ்தவ நேயம். இவை இரண்டிற்கும் நேயம் மிகவும் தேவைப்படுகிறது. இத்தகைய வ–மையான சமய உணர்வு, பக்தி, பேரன்பு நம் அனைவருக்கும் தேவைப்படுகிறது. நேயத்தை உணர உணர நேயத்தின் அடர்த்தி அதிகமாகும். அடர்த்தி ஒன்றிப்பை பலப்படுத்தும். கிறிஸ்துவின் அன்பி–ருந்து நம்மைப்பிரிப்பது யாருமில்லை, எதுவுமில்லை என்று புனித பவுலடியார் கிறிஸ்துவ சமூகத்தைக் கட்டி எழுப்புகின்றார். நயமிகுநேயம் நம்மை விட்டு பிரியாதிருக்க இதற்கெனவே மிகவும் அவசர உலகில் சிறைப்பட்டும் விடாமல் தினமும் ஒருமணி நேரமாவது காலையிலும் மாலையிலும் நாம் இறைப்பிரசன்ன உணர்வில் நிலைத்து நிற்க தியானம் தேவைப்படுகிறது. வேலை வேலை என்று நம்மை நாம் இழந்துவிடக்கூடாது. இவ்வுலகம் பணத்தை முன்வைத்து நம்மை சோதித்துக்கொண்டு வரும் என்பதில் சந்தேமில்லை. யாரும் இருதலைவர்கட்கு (பணம், பரமன்) ஊழியம் செய்ய முடியாது. கடவுளின் பின்செல் பணம் உன்னைப் பின்தொடரும். பணத்தைப் பின்செல், சாவுதான் நம்மில் நிறைவாக வரும். முதன் முத–ல் இறையரசைத் தேடுங்கள், மற்றதெல்லாம் உங்களுக்கு வழங்கப்படும் என்பதை நம்புவோம்.

நமது நாடு வளரும்போது இரண்டு விதமான சவால்கள் எழ வாய்ப்புண்டு. பணம் வளர்ச்சி அதிகமானால் இறைவனை ஓரங்கட்டுவோம். கடவுள்பக்தி வளர்ந்தால் மனநிறைவோடு வாழ அவரே அருள் புரிவார். இரண்டையும் சமாளிக்கலாம் என்று சமரசம் செய்ய வேண்டாம். நிரந்தரமான நிர்மலனை நாடு! அவர் அனைத்தையும் அளித்து பாதுகாப்பார். பறவைகளைப் பாருங்கள், புல்பூண்டுகளைப் பாருங்கள் இவைகளைவிட அவருடைய குழந்தைகள் மேலானவர்கள் அல்லவா? அஞ்சவேண்டாம்! புனித தோமையாரின் அனுபவம் பெற்று என் ஆண்டவரே, என் தேவனே என்று மண்ணையும் விண்ணையும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வோம். அர்ப்பணமே ஆனந்த வாழ்வுக்கு நிரந்தரமான அடித்தளம் என்று ஆமென் அல்லேலூயா பாடுவோம்.



# வசந்தமாய் வாழ்வு

–அருள்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி, திருப்பாப்புலியூர், கடலூர்.

## 47. தன்மானம் காத்திடு

மனிதன் மாண்போடு வாழவேப் படைக்கப்பட்டான். எனவே ஒவ்வொருவரும் பிறரை மரியாதையோடு நடத்தவும், தமது சுயமரியாதையை காக்கவும் அறிந்திருத்தல் அவசியம். 'என் கருத்து மிகச் சரியானது என்று நான் அறிந்தபோதிலும், அதை மறுப்பவர்க்கு எல்லா வாய்ப்புக்களையும் தருவதற்குப் பெயர்தான் மரியாதை' என்கிறார் எமர்சன். ஏனென்றால், சர்வாதிகாரத்திலேயே சகிக்க முடியாதது கருத்துச் சர்வாதிகாரம். 'நான் சொல்வதை மட்டுமே மற்றவர் ஏற்று நடக்க வேண்டும்' என்பது ஆணவத்தினால் பிறரை அடிமைப்படுத்தும் செயல்பாடு. கருத்து மாறுபடலாம். கொள்கை வேறுபடலாம். ஆனாலும், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற அண்ணாவின் கூற்றைப்போல, எந்த நிலையிலும் மாற்றாரை மதிக்கும் மரியாதைப் பண்பு நம்மில் வளர வேண்டும்.

முதலில் நம்மை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய நற்செயல்கள், நன்னடத்தை, திறன்கள் குறித்து நாம் நன்மதிப்பும், மனநிறைவும் கொள்வது நமக்குச் சுயமரியாதை உணர்வை உருவாக்கும், அடிமை மனத்தை அகற்றும். ஒருவருக்கு அதிக மரியாதை கொடுத்து நமது சுயமரியாதையைக் காயப்படுத்திடல் கூடாது. வாழ்வில் உறவுகளும், உயர்வுகளும் முக்கியம்தான். ஆனால் அதைவிட நம் தன்மானம் முக்கியம். நம்மை பிறர் மதிக்கவில்லை என நினைத்து வருந்துவது முட்டாள்தனம். மாறாக, அவர்களுக்கு நம் மதிப்பு தெரியவில்லை என்று விலகுதல் நன்று. 'விட்டுக் கொடுப்பவர் கெட்டுப்போவதில்லை' என்பார்கள். ஆனால் விட்டுக்கொடுப்பதும், அனுசரித்துப் போவதும் தொடர்ந்தால், நமக்கும் உணர்வுகள் உண்டு என்பதையே மற்றவர்கள் மறந்துவிடுவார்கள். தவறேதும் செய்யாமல் தன்மானத்தை சீண்டும் நிலை வந்தால் எங்கேயும், எவரையும் எதிர்த்து நிற்பதில் தவறில்லை. நம்மை மதிக்காதவர்களை நாம் மதியாமல் இருப்பது தலைக்கனம் அல்ல, அது தன்மானம். எனவேதான், 'மதியாதார் தலை வாசல் மிதியாதே' என்று மானம் உள்ள மனிதனுக்கு ஔவையார் சொல்லி வைத்தார். வள்ளுவரோ,

*ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று*

'தன்னை மதியாதவரின் பின் சென்று ஒருவன் உயிர்வாழ்வதை விட, அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நல்லது' என்கிறார். 'அநீதியை எதிர்ப்பது குற்றமல்ல, அது நமது உரிமை. அதற்கு அடங்கி வாழ்வது அவமானம். போராடி வாழ்வதே தன்மானம்' என்கிறார் பெரியார்.

*"பூமியில் எவர்க்கும் இனி*
*அடிமை செய்யோம் - பரி*
*பூரணனுக்கே அடிமை*
*செய்து வாழ்வோம்.*

என்று பாரதி பாடும்போது, சுதந்திரம் பெற்ற பிறகு யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டோம். இறைவனுக்கு மட்டுமே அடிமையாக இருப்போம் என்கிறான். இந்த ஞானம் இல்லாததினால்தான், சுதந்திர நாட்டிலும், பலபேர் யார் யாருக்கோ, எது எதற்கோ அடிமைகளாகவே இருக்கிறார்கள். 'ஒருவரின் காலடியில் வாழ்வதை விட, எழுந்து நின்று உயிரை விடுவது எவ்வளவோ மேல்' என்கிறார் சேகுவாரா.

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்*

'கவரிமான் தன் மயிர் போனால் உயிர் வாழாது. அதையொத்தவன் தன் மானம் பறிபோகிறது என்றால் உயிர் விடுவான்' என்கிறார் வள்ளுவர். கீழ்மையானவர்கள் தங்கள் சுயநலனுக்காக வளைந்தும், குழைந்தும், அடிவருடிகளாக வாய்பொத்தி, கூழைக் கும்பிடுகளால் வாழ்தல் என்பது தன்மானத்தை, சுயமரியாதையை அடகு வைத்த அடிமைத்தனம். தன்மானத்தை இழந்துதான் ஒன்றை பெற வேண்டுமெனில், அத்தகைய ஒன்று நமக்குத் தேவையில்லை.

*விலங்குகள் நம்மினும்*
*மானமுள்ளவை:*
*யானையின் காலில்*
*யானை விழுந்ததாய்த்*
*தகவல் இல்லை.*
*பூனைக்கு எலிகள்*
*பல்லக்குச் சுமந்ததில்லை*
*கரடிக்கு மான்கள்*
*கால்பிடித்து விட்டதில்லை*
*ஒன்று*
*சுதந்திரத்தின் வானம்*
*இல்லை*
*மரணத்தின் பள்ளம்*
*இடைப்பட்ட வாழ்க்கை*
*விலங்குக்கில்லை.*



**I RESPECT YOU**

என்கிறார் கவிஞர் வைரமுத்து. இறைவனின் அடிமையாக இருக்க வேண்டியவன், இன்று தனது பிழைப்பிற்காக, ஆதாயத்திற்காக, மனிதனின் அடிமையாக இருக்கிறான். சுயநலம் மிக்கவனும், சுயமரியாதையை தொலைத்தவனும் அடிமை முறைக்குத் தன்னை பழக்கப்படுத்திக் கொள்கிறான். எனவே, பிறர் தயவில் வாழ நினைப்பவன் விடுதலை அடைய முடியாது. பணம், பதவி, பெயர், புகழைக் காட்டிலும் சுயமரியாதை என்பது இந்த உலகத்தில் மனிதனுக்கு மிகவும் முக்கியம். எனவேதான் சூ∴பி ஞானி பாபா ஷேக் பரீத்,

*'இறைவா! பிறர் தயவில்*
*என்னை வாழவைத்துவிடாதே!*
*அதுதான் என் விதி என்றால்*
*நீ என் உயிரை எடுத்துக் கொள்'*

என்று பிரார்த்தனை செய்கிறார். சுய மரியாதை உள்ள ஒவ்வொருவனும் செய்ய வேண்டிய பிரார்த்தனை இது. சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு.

வசந்தம் வீசும்...



## "தந்தையின் இதயத்தோடு" புனித வளனார் ஆண்டு மடல்

அருள்திரு.M.**லூர்து ஜெயசீலன்**,
பங்குத்தந்தை, வடலூர்.



## 24. நிழல் தந்தை

குழந்தைகளைப் பெற்றெடுப்பதால் மட்டும் ஒருவர் தந்தையாகி விட முடியாது. மாறாக குழந்தைக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றும் போதுதான் அவர் தந்தையாகிறார். அந்த நிலையில் புனித வளனார் இயேசுவை வளர்ப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போதே அவருக்கு நிழல் தந்தையாக மாறுகிறார். "பாலை நிலத்தில் நீங்கள் நடந்து வந்த வழிகளில் எல்லாம் இங்கு வந்து சேரும்வரை ஒருவன் தன் மகனைத் தூக்கி செல்வதுபோல உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களைத் தூக்கி வந்ததை கண்டீர்களே" (எசா1/31) என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம். மோசேவின் இந்த வார்த்தைகளை நாம் புனித வளனாரோடு ஒப்பிட்டு பார்க்க முடியும். புனித வளனார் விண்ணக இறைவனின் நிழல் தந்தையாக இயேசுவுக்கு விளங்குகிறார். அவர் இயேசுவை வளர்க்கிறார், பாதுகாக்கிறார், வழிநடத்துகிறார் தனது ஒவ்வொரு செயலிலும் விண்ணக இறைவனைப் பிரதிபலிக்கின்றார்.

### உண்மைத் தந்தை

இன்றைய உலகில் உண்மைத் தந்தையர்கள் தேவைப்படுகிறார்கள். குறிப்பாக திருச்சபையில் உண்மைத் தந்தையர்கள் அதிகம் தேவைப்படுகின்றார்கள். புனித பவுல் சொல்வதைப்போல ஒவ்வொரு ஆயரும், குருவும், துறவறத்தாரும் கூறவேண்டும். **"கிறிஸ்துவைக் சார்ந்த உங்களுக்கு ஆசிரியர்கள் பல்லாயிரம் இருக்கலாம். ஆனால் தந்தையர் பலர் இல்லை. நற்செய்தி வழியாக நான் உங்களை கிறிஸ்துவர்களாக ஈன்றெடுத்தேன்"** (1 கொரி 4:15) மேலும், "என் பிள்ளைகளே உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19) என்று புனித பவுல் கலாத்தியருக்கு கூறுவதைப்போல ஒவ்வொரு ஆயரும், குருவும், துறவறத்தாரும் கூறவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவருக்கு உண்மைத் தந்தையராக விளங்கவேண்டும்.

### இறைவனின் நிழல் தந்தை

தந்தை என்பவர் பிள்ளைகளை இயல்பாக வளர்க்க வேண்டும். உலக நியதிகளைச் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். அவர்களை பாதுகாத்து யதார்த்தங்களைச் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். சுதந்திரமாக வளர்க்க வேண்டும். அத்தகைய பணியைத்தான் புனித வளனார் இயேசுவுக்கு செய்தார். இயேசுவின் மீது தனது மகன் என்ற பற்றுக்கொள்ளாமல் இறைமகன் என்ற உணர்வுகொண்டு வளர்த்தார். கடவுளும் இஸ்ராயேல் மக்களை, தனது மக்கள் என்று கட்டுப்படுத்தாமல் சுதந்திரத்தைக் கொடுத்து வளரச் செய்தார். புனித வளனாரும் தன்னை மையப்படுத்தாமல் இயேசுவையும், மரியாவையும் மையப்படுத்தி வாழ்ந்தார். இறைவனின் நிழல் தந்தையாக செயல்பட்டார்.

### அர்ப்பணிப்பின் தந்தை

புனித வளனார் எப்பொழுதுமே இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்தார். அவரின் முழுமையான அமைதி அவருக்கு இறைவன் மீது இருந்த முழுமையான பற்றுறுதியைக் காட்டுகிறது. எனவே இன்றைய உலகம் அவரைப் போன்ற தந்தையரைத்தான் எதிபார்க்கிறது. இன்றைய உலகம் **அதிகாரம் - அதிகாரப்படுத்துதல், பணிசெய்தல் - பணிக்கப்படுதல், உரையாடல் - அடிமைப்படுத்துதல், உதவி - சுகபோகம், பதவி - பலவீனம்** இவைகளுக்கான வேறுபாட்டை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஒவ்வொருவரும் அர்பணிப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். குருத்துவம், துறவறம் இரண்டுமே முழுமையாக புரிந்துகொள்ளப்பட வேண்டும். நமது அழைப்பு குருத்துவமாக, துறவறமாக, மற்றும் இல்லறமாக எதுவாக இருந்தாலும் அர்பணிப்பின் முழுமையில் மகிழ்ச்சி பெறவேண்டும். இல்லையெனில், துன்பத்தைதான் சுவைக்க நேரிடும்.

### குழந்தை வளர்ப்பு

உண்மைத் தந்தையர்கள் தங்களின் குழந்தைக்காக வாழ்வார்கள். அப்படி வாழவில்லையெனில் குழந்தைகள் குழப்பத்தைதான் சந்திப்பார்கள். ஒவ்வொரு குழந்தையும் சிறப்பான ஆற்றலுடையவர்கள். தந்தையர்கள் அவர்களுக்கு கொடுக்கும் சுதந்திரத்திலும், அன்பிலும் அவர்கள் தங்களின் ஆற்றலை வெளிக்கொணர்வர். புனித வளனாரும் இயேசுவை வளர்க்கும்போது அவரைக் கடவுளின் திட்டத்திற்கேற்ப முழு மனிதனாக வளர்க்க வேண்டும் என்ற உறுதியோடு வளர்க்கிறார். அதனால்தான் இயேசுவும் **"இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார்"** (மத் 23/9) என்று சொல்லுகிறார். எனவே உண்மைத் தந்தை என்றால் குழந்தைகளுக்கு விண்ணகத் தந்தையைப் பிரதிபலிக்க வேண்டும். நாம் அனைவரும் உண்மைத் தந்தையர்களாக வாழவேண்டுமெனில் இறைவனின் நிழல் தந்தையர்களாக செயல்பட வேண்டும். குழந்தைகளை கடவுளின் திட்டப்படி வளர்க்க வேண்டும்.

### நிழல் தந்தையான புனித வளனாரிடம் செபிக்கும்போது

1. நாம் ஒவ்வொருவருமே நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பில் இறைவனின் நிழலாக இருந்து செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணரவேண்டும்.

2. நான், எனது என்ற நிலையில் அல்ல, முழுமையான அர்ப்பணிப்பில்தான் நாம் இறைவனின் நிழல் தந்தையாக செயல்பட முடியும்.

3. குருத்துவமாக இருந்தாலும், துறவறமாக இருந்தாலும் நாம் உண்மை அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி இறைவனின் நிழலாக செயல்பட வேண்டும்.

4. புனித வளனார் இறைவனின் நிழலாக இருந்து இயேசுவை வளர்த்தைப்போல நாமும் நமது பணியில் இறைவனின் நிழலாக செயல்படுவோம். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவோம்.



# எது சொந்தம்?

– திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

விளைநிலங்களில் எல்லாம் வீடுகள் முளைத்திருந்தன. ஏரிகள் எல்லாம் காணாமல் போயின. மலைகள் எல்லாம் மண் மேடுகள் ஆகின. மணல்கள் சுரண்டப்பட்டு மாடி வீடுகளில் தஞ்சம் புகுந்தன. ஆம், அந்த ஊர் இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையிலிருந்து வெகுவாக மாறிப் போனது.

வானை முட்டும் அளவிற்கு பலப்பல மாடி வீடுகள் முளைத்து வண்ண வண்ண நிறங்களில் மின்னிக் கொண்டிருந்தன. மக்கள் தொகை புற்றீசல் போலப் பெருகியிருந்தது.

சார்லஸ் தனது வெளிநாட்டுப் பயணத்தால் ஈட்டிய பெருந்தொகையில் பல இலட்சங்கள் செலவழித்து அந்த ஐந்து மாடிக் கட்டிடத்தில் இரண்டாவது மாடியில் ஒரு அழகான வீட்டினை வாங்கி புதுமனைப் புகுவிழாவினை உறவினர்கள் நண்பர்கள், தெரிந்தவர்கள் அனைவரையும் வரவழைத்து வெகு சிறப்பாகக் கொண்டாடி முடித்தான். தனக்குச் சொந்தமாக ஒரு வீட்டை வாங்கியதில் அலாதி மகிழ்ச்சியடைந்தான்.

ஒருநாள் "சார்லஸ் என்ன புது வீடு வாங்கியதில் அதிக மகிழ்ச்சியாக இருக்கிற போலிருக்கிறது?" என்றார் அவனது ஆசிரியர். "ஆமாம் சார், நீண்டநாள் கனவு இப்போதுதான் எனக்கு நிறைவானது மனதிற்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கின்றது" என்றான் மகிழ்ச்சியோடு.

"ஓ.. அப்படியா! அந்த வீடு உனக்குத்தான் நிரந்தர சொந்தம் அதில் மகிழ்ச்சிதான். ஆனால் உன் வீட்டின் இடது பக்க சுவர் அடுத்த வீட்டில் வாழும் மாணிக்கத்திற்கும் சொந்தம், வலது பக்க சுவர் அதில் வாழும் அப்துல்லாவிற்குச் சொந்தம். தெற்கு பக்க சுவர் தென்னாலிக்குச் சொந்தம். வடக்குப் பக்க சுவர் வட இந்தியனுக்குச் சொந்தம். அப்ப உனக்கு எது சொந்தம் என்பதை யோசித்தாயா?"

சார்லஸ் குழம்பிப் போனான். "இது என்ன சார் புதுக்கதையாக இருக்கின்றது?" என்றான். "சரி கோவிலுக்குச் சென்று எவ்வளவு நாள் ஆச்சு?" என்றார் ஆசிரியர்.

"கொரோனா வந்ததால போக முடியல சார்" என்று ஒப்புக் கொண்டான் சார்லஸ். "ஆண்டவன் வாழும் ஆலயத்திற்கு உன்னால் போக முடியல. ஆனா பலபேருக்கு கூட்டாகச் சொந்தமான இடத்திற்கு உரிமைக் கொண்டாடி அதுவே நிரந்தரம் என்று வாழ ஆரம்பித்து விட்டாயே! எது நிரந்தரம் என்பது உனக்குப் புரியலையா?" என்றார் ஆசிரியர்.

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம். செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம், பதவியும் புகழும் தருவதில் இல்லை நிரந்தரம் என்று ஆசிரியர் சொல்லிக் கொடுத்தப் பாடல் சார்லஸ் மனதில் நிழலாட ஆரம்பித்தது.

இருக்கும் இடம்விட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ செல்கிறது நமது மனம். இறைவனே நிரந்தரம். என்றும் அவர் தரும் இன்பமே நிரந்தரம் என்பதை உணர்ந்து வாழ்வோம்.

# புனித வெரோனிக்காவின் கைக்குட்டை

செல்மா லேகர்லோஃப்

(சுவீடன் நாட்டின் நோபல் பரிசு பெற்ற முதல் பெண் எழுத்தாளர்)

திரு. ஜெயராஜ் தானியேல், முத்தியால்பேட்டை, புதுவை-3



சென்ற இதழ் தொடர்ச்சி...

"ஆம், அவளுடைய பாசத்தையும் நேர்மையையும் எப்படி மதித்துப் பாராட்டுவது என்று டைபீரியசுக்குத் தெரியும். சபீன் மலைகளில் துயர்மிகுந்த குடிசையிலிருந்து வந்த இந்த விவசாயப் பெண்ணை தன் தாயைப் போல் கவனித்துக் கொண்டார் பேரரசர். அவர் ரோமாபுரியில் தங்கியிருந்த பொழுது அவளை பலாதீன் மலையில் (ரோமாபுரியில் உள்ள ஏழு மலைகளில் மிக முக்கியமான ஒன்று) உள்ள மாளிகையில் தன் அருகிலேயே தங்க வைத்தார். ரோமாபுரியில் இவளைப் போல் எந்தவொரு செவிலியரும் பணி செய்யவில்லை. ஒரு பேரரசியைப் போல உடுத்திக் கொண்டு தெருக்களில் பல்லக்கில் தான் பயணம் செய்வாள். பேரரசர் காப்ரி தீவுக்குக் (இத்தாலியின் மேற்கு கடற்கரையில், நேபிள்சுக்கு தெற்கே உள்ள தீவு) குடி பெயர்ந்த பொழுது, அவளும் உடன் சென்றாள். அங்கே அவளுக்காக தோட்டத்துடன் கூடிய மாளிகையை வாங்கி, அதை விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரித்து, பணி புரிய அடிமைகளையும் நியமித்தார்."

"நிச்சயம் அவள் செம்மையாக நடந்து கொண்டிருப்பாள்," என்ற கணவனின் ஆர்வம் மிகுந்தது. மனைவி அமைதியாக மூதாட்டியிடம் ஏற்படும் மாறுதல்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். புதியவர் வந்ததிலிருந்து அவள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இப்பொழுது, அவளிடம் கனிவான, நட்பான தோரணை மறைந்து விட்டது. உணவுத் தட்டை தள்ளி வைத்து விட்டு விறைப்பாக நிமிர்ந்து வாசற்படியில் சாய்ந்து கொண்டு அசையாமல் நேரே வெறித்துப் பார்த்தாள்.

"அவள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று விரும்பினார் பேரரசர். ஆனால், அவளும் அவரைக் கைவிட்டுப் போய் விட்டாள்."

இதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்த மூதாட்டியின் கையைப் பிடித்து அமைதிப்படுத்திய தொழிலாளியின் மனைவி, புதியவர் பக்கம் திரும்பி, இரக்கம் கலந்த குரலில் மெதுவாகப் பேசினாள்: "நீங்கள் சொல்வது போல அரசவையில் ஃபொஸ்தினா மகிழ்ச்சியாக இருந்தாள் என்பதை நான் நம்பவில்லை. அவளுடைய சொந்த மகனைப் போலவே டைபீரியசை அவள் நேசித்தாள். அவருடைய இளமைக் காலத்தை அவள் மிகவும் பெருமையாகக் கருதினாள் என்று எனக்குத் தெரியும். அதைப் போலவே, தன்னுடைய முதுமைக் காலத்தில் அவர் அவநம்பிக்கையோடும் மிருகத்தன்மையோடும் நடந்து கொண்டதைப் பார்த்து எவ்வளவு துயரப்பட்டிருப்பாள் என்பதும் எனக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் அவரை எச்சரிக்கை செய்து கண்டித்திருப்பாள். கடைசியில், தான் சொல்வதெல்லாம் 'விழலுக்கிறைத்த நீராகிப் போனது' கண்டு வேதனைப்பட்டு, அவருடைய நிலை மேலும் மோசமடைவதைக் காணச் சகியாமல் போயிருப்பாள்."

இதைக் கேட்டதும், புதியவர் வியப்போடு சற்று முன்னோக்கி சாய்ந்தார். ஆனால், கண்களைத் தாழ்த்தியவாறு, அவள் மெதுவாக அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். அரசவையில் ஃபொஸ்தினா மகிழ்ச்சியாக இல்லை என்பது உண்மை. இருப்பினும், இத்தனைக் காலம் சகித்துக் கொண்டிருந்து, அவருடைய முதுமைக் காலத்தில் கைவிட்டுப் போனது தான் புதிராக இருக்கிறது" என்றார் புதியவர்.

தொடரும்...

## இளம் உள்ளங்களுக்கு



## 171 நான் உன்னை மன்னித்து விட்டேன்

– B. மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**தண்டனைகள் பலவிதம்:** பல நாடுகளில் இன்னமும் கொலை மற்றும் கடுமையான குற்றங்களுக்கு மரணத்தண்டனை வழங்கப்படுகிறது. தூக்கி–டுவது, வாளால் தலையை துண்டித்து உயிரைப் போக்குவது, கல்லால் அடித்து கொல்வது, சிலுவையில் அறைவது, கழுவிலேற்றுவது, மரத்தில் கட்டிவைத்து அம்பெய்து கொல்வது, கொடிய விலங்குகளுக்கு இரையாக்கிக் கொல்வது, கில்லட்டின் மூலம் தலை துண்டிக்கச் செய்து கொல்வது, விஷம் அருந்தி சாகச் செய்வது, விஷ ஊசி ஏற்றி சாகடிப்பது, மின்சார நாற்கா–யில் அமரச் செய்து உயர் மின்சாரம் பாய்ச்ச செய்து சாகடிப்பது, மற்றும் துப்பாக்கியால் சுட்டு கொல்வது என்று ஆதிகாலம் முதல் இன்றுவரை பல்வேறு விதமான மரணத் தண்டனைகள் நிறைவேற்றப்படுகின்றன.

**தூக்கு மரத்தடியில் ஓர் சம்பவம்:** சமீப காலத்தில் ஈரான் நாட்டில் இது போன்ற ஒரு கொலை குற்றவாளிக்கு மரணத்தண்டனை அறிவிக்கப்பட்டது. அங்கே, ஒரு கொலை குற்றவாளி கழுத்தில் தூக்குக் கயிறு கட்டப்பட்ட நிலையில் தூக்கு மேடையில் தண்டனை நிறைவேற்றபடுவதற்காக நிறுத்தப்பட்டிருந்தான். அவனுக்கு எதிரே அந்த குற்றவாளி யாரை கொலை செய்தானோ அவனுடைய தாயும் நின்று கொண்டிருந்தார். சற்று தள்ளி, தன் மகனை கடைசிவரை உயிரோடு காணவேண்டும் என்ற ஏக்கத்தில், கொலைக்காரனின் தாயும் நின்று கொண்டிருந்தார். இந்த தண்டனை பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்த்தப்படவேண்டும். கொலை செய்யப்பட்டவனின் தாய் அந்த கொலைக்காரன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முக்கா–யை காலால் உதைத்துத்தள்ள வேண்டும். அப்போது அவன் கயிற்றில் அதலபாதாளத்தில் தொங்கி உயிர் துறப்பான்.

**புதிய தண்டனை:** மகனை பறிக்கொடுத்தவனின் தாய் அவன் அருகில் சென்றாள். அடுத்து நடக்கவிருப்பதை சுற்றி நின்ற மக்களில் பலர் ஆர்வமாகவும், பரிதாப உணர்ச்சியுடைய சிலர், கொலைக்காரனின் தாய் உட்பட அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், ... அந்த தாய் முக்கா–யை உதைத்துத் தள்ளவில்லை. அதற்குப் பதிலாக அவன் கழுத்தில் மாட்டியிருந்த கயிற்றை எடுத்துவிட்டு, "**நான் உன்னை மன்னித்து விட்டேன்**" என்றார். அடுத்தகணம் கொலைக்காரனின் தாய் ஓடி வந்து கொலை செய்யப்பட்டவனின் தாயைக் கட்டி அணைத்து, கா–ல் விழுந்து ஆனந்த கண்ணீர் வடித்தாள். அந்த குற்றவாளியின் தண்டனையும் நிறுத்தப்பட்டு அவன் விடுவிக்கப்பட்டான்.

**இறைவன் செயல்:** ஒரு தாயின் கண்ணீர், கவலை, கதறல் இன்னொரு தாய்க்கு தான் புரியும், இவ்வுலகில் மன்னிப்பைவிட பெரிய தண்டனை வேறு எதுவும் கிடையாது. மன்னிப்பு என்பது மாபெரும் செயல். பழிக்கு பழி இரத்தத்திற்கு இரத்தம் என்று பழிவாங்கத்துடிப்பது உலக இயல்பு. ஒருவரது குற்றத்தை மன்னிக்க பெரிய மனம் வேண்டும். மன்னிப்பது என்பது இறைவன் செயல். இறைமகன் இயேசு சிலுவையில் தந்த மாபெரும் பாடம் மன்னிப்பு. சிலுவையில் அறையப்பட்ட இயேசு, "**தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை**" என்று சொன்னார் (லூக் 23:34).

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச–



**திரு.A.ஆரோக்கியநாதன்** M.Sc.,B.Ed.,

B.T.Asst.,Don Bosco Hr.Sec.School, Polur.

மண்ணில்: **20.05.1973**

விண்ணில்: **18.09.2020**

"இறந்தாரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்! எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல நீங்களும் துயருறக்கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம் அப்படியானால் இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்" - 1தெச 4:13-14.

நித்தம் நித்தம் உன் நினைவுகளை<br>
நெஞ்சமதில் ஏந்திக் கொண்டு<br>
நாட்களைக் கடத்தினோம் ஒருவாறு<br>
நாட்காட்டிக் காட்டுதே ஓராண்டு!

எதிர்பாரா தருணம், நேர்ந்தது மரணம்<br>
எம் மனதில் ஏற்படுத்தியது ஆறாத ரணம்<br>
பெற்ற அன்னையின் தொடர் அழுகையும்<br>
உற்ற மனைவி பிள்ளைகளின் துயரமும்<br>
உடன் பிறந்தோர் உறவுகளின் கண்ணீரும்<br>
உம்மை எட்டாமல் போனதேன் நாதா!

அறுவர் நாம் பிறந்து வளர்ந்தோம் - அதில்<br>
இருவராய் இணைந்து இருந்தோம் - எனை<br>
ஒருவராக்கி தவிப்பில் விட்டு சென்றாயே<br>
ஊர் முழுதும் தேடுகின்றோம்! வாராயோ?

அழுதிடும் மனதிற்கும் தொழுதிடும் உள்ளத்திற்கும்<br>
ஆறுதல் தரும் மந்திரம் இறைவனின் சித்தமிது<br>
உயிர்ப்பு உண்டென உரைத்தனன் நம் தேவன்<br>
உன்னத எதிர்நோக்கில் தொடருதே எம் ஜீவன்.

**பிரிவால் துயருறும்**

தாய்: V. அருணோதயமரி Rtd.HM

மனைவி: S. சகாய அனுசுயா D.T.Ed.,

பிள்ளைகள்: A.அமலபால்ராஜ், A.மரியசெ–ன்

உடன் பிறந்தோர், உறவினர்கள்.

**நினைவு திருப்ப–:** இடம்: **புனித அந்தோணியார் ஆலயம், கண்டாச்சிபுரம் வட்டம், ஆயந்தூர்**

நாள்: 18-09-2021 சனிக்கிழமை காலை 10.00 மணி.

## விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 29-04-1921



விண்ணில்: 17-09-2010

திருமதி. **பொம்பே மரி ஸ்தானாபதி**

**W/o. Dr. A. Benedict**

"நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" - திபா 23:6

**திருப்ப–:** இவரது ஆன்ம இறைப்பாற்றிக்காக 17-09-2021 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப– நிறைவேற்றப்படும்.

செபிக்கும்

**உம் பிள்ளைகள்,**<br>
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**<br>
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

## 5-ஆம் விண்ணக வாழ்வின் 11-ஆம்
## ஆண்டு நினைவு அஞ்சலி ஆண்டு நினைவு அஞ்சலி



**கித்தேரியம்மாள்** **P.A. ராஜன் (எ) ஆசீர்வாதம்** (S.W.I)

**மறைவு: 16-06-2016** **மறைவு: 20-09-2010**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவா 11:25

**இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக, 20-09-2021 திங்கள் காலை 5.00 மணிக்கு கணக்கன்குப்பத்திலும், காலை 6.30 விழுப்புரம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் காலை 6.00 மணிக்கு உழவர்கரை புனித ஜெயராக்கினி அன்னை ஆலயத்திலும் திருப்ப- நிறைவேற்றப்படும் இதை காண்போர் இவர்களது ஆன்மாவுக்காக செபிக்கவும்.**

பிரிவால் துயருறும்
மகன்: அன்பு (எ) அம்புரோஸ், மருமகள்: ரீட்டா - *விழுப்புரம்.*
**மற்றும் உறவினர்கள்**
கணக்கன்குப்பம்.

## விண்ணக வாழ்வின்
## 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 09.11.1916



விண்ணில்: 18.09.2003

**அருட்சகோதரி. நர்சிஸ்மேரி, FIHM**
**வார்த்தைப்பாடு: 06.09.1935**

"ஆண்டவரே! உமது பேரன்பிற்கேற்ப என் குரலைக் கேட்டருளும்; உமது நீதியின்படி என்னுயிரைக் காத்தருளும்" – திபா 119:149

கருணையே உருவான இறைவா! எங்கள் மத்தியில் பேரொளியாக பிரகாசித்து, அன்பின் ஊற்றாய் திகழ்ந்து, செயலினால் அனைவரின் மனதிலும் அமர்ந்து நித்திய சமாதானத்தில் இளைப்பாற உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எம் அருட்சகோதரி நர்சிஸ்மேரி அவர்களுக்கு நித்திய பேரின்பத்தை அளித்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

பிரிவால் துயருறும்
**தம்பி, தங்கைகள், தம்பி- தங்கையின் மகன்கள், மகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின்
## 8-ம் ஆண்டு நினைவு

தோற்றம்:02-05-1954



மறைவு: 17-09-2013

## திருமதி. K.ஜெசிந்தா,
ஆசிரியை

"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே!" (பிலி 1:21)

**திருப்ப-**

**17-09-2021, வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு செல்-யம்பட்டி, தருமபுரி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.**

என்றும் உன் அன்பில் வாழும்
கணவர்: **ஆ. மரியசெல்வம்**
பிள்ளைகள், உடன் பிறந்தோர்,
மருமகன்கள், மருமகள்,
மற்றும் பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வின்
## 10-ம் ஆண்டு நினைவு

தோற்றம்:26-12-1971



மறைவு: 14-09-2011

**திரு.ம.இம்மானுவேல் ஜோசப்**

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" (எசா. 62:3)

**திருப்ப- நாள்** : 14-09-2021
**நேரம் : காலை 6.00 மணி, செவ்வாய்**
**இடம் : ஆரோக்கிய அன்னை ஆலயம், அரியாங்குப்பம், புதுச்சேரி.**

இவரது ஆன்மா விண்ணகப் பேரின்ப வான்வீட்டில் முடிவில்லாதப் பிரகாசமும் அமைதியும், அருளும் பெற்றிட செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்...
அன்பு மனைவி: **A. மார்கிரேட்**
அன்பு மகள்: **E.** டானியா பிரான்சி
பெற்றோர், சகோதரர் மற்றும் உறவினர்கள்.

## விண்ணக வாழ்வின்
## 16-ஆம் நாள் நினைவு

தோற்றம்:27-04-1960



மறைவு: 23-08-2021

A.**சூசைமேரி**

நிர்வாகி, முதல்வர், செயின்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளி
கோபாலகிருஷ்ணா நகர், திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு,
வானூர் தாலுக்கா.

*"நான் ஒருபோதும் உன்னை கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலகமாட்டேன்." - எபி 13:5*

விண்ணகத் தந்தையே!
உங்கள் அன்பு மகளாக எங்கள் குடும்பத்தின் ஒப்பற்ற தலைவியாக வாழ்வில் தன் பணிகளை நேரிய முறையில் செம்மையாக செய்து எங்களுக்கு ஒரு நல் வழிகாட்டியாய் வாழ்ந்து உம் திருப்பாதம் அடைந்துள்ள உமது அடியார் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா உம் விண்ணக வாழ்வையும் அளித்தருளும் - ஆமென்.

பிரிவால் துயருறும்
கணவர், மகன், மகள், சகோதாரர்கள்,
சகோதரி மற்றும் உறவினர்கள்.

# நினைவு அஞ்சலி



## திரு. A. மரிய ஜெகநாதன் திருமதி.லூர்துமரி ஜெகம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் | : | 10-06-1919 | தோற்றம் | : | 23-03-1926 |
| மறைவு | : | 10-09-1983 | மறைவு | : | 01-12-2014 |

"கடவுளே என் கேடயம், நேரிய உள்ளத்தோரை அவர் விடுவிப்பார்" - திபா 7:1.

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறை பக்தியையும் நல்ல பண்புகளையும் கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாய், தந்தையை நினைத்து கலங்குகின்றோம். எங்கள் அருமை பெற்றோர்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று இரக்கம் நிறைந்த இயேசுவே உம்மை நோக்கி மன்றாடுகிறோம் - **ஆமென்.**

**திருப்ப-** 10-09-2021 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

---

## 21-ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் : 04-05-1938



மறைவு : 15-09-2000

### திரு. M. ஏகாம்பரம் அருள்நாதன் M.A.,B.Ed

(தலைமை ஆசிரியர் ஓய்வு)

## 87-ஆம் நாள் நினைவு

தோற்றம் : 10-12-1947



மறைவு : 21-06-2021

### M. லூர்துமேரி

M.A.,B.Ed Retd.Tr.

## 61-ஆம் நாள் நினைவு

தோற்றம் : 29-07-1959



மறைவு : 17-07-2021

### S. பெலிக்ஸ் அந்தோணிசாமி

M.SW, Retd.Supdt.Agri.Dept.

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"*
*யோவான் - 11:25*

**இதை காணும் அனைவரும் இவர்களது ஆன்மா நித்திய பேரின்ப வான் வீட்டில் முடிவில்லா பிரகாசமும் அருளாசியும் பெற்றிட வேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனிடம் ஜெபிக்க வேண்டுகிறோம். – 1கர்.1மங்.1திரி.**

**பிரிவால் துயருறும்**
மனைவி, மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

**பிரிவால் துயருறும்**
குடும்பத்தினர்.
கடலூர்-2.

**பிரிவால் துயருறும்**
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை மற்றும் குடும்பத்தினர்.

# ஆப்கானிஸ்தான் என்னும் (காடு) நாடு



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
கியூரியா செயலர், பேராயர் இல்லம்.

இந்த உலகில் மனித இனம் தோன்றி ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. மனித இனம் பல்வேறு மாற்றங்களைக் கடந்து, பரிணாமங்களைக் கண்டு பண்பாடு, கலாச்சாரம், சமூக கட்டமைப்பு என்று எல்லா நிலைகளிலும் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு அசுர வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும் இந்த 21ம் நூற்றாண்டிலும்கூட வளர்ச்சியடையாத கற்கால மனிதர்கள் / காட்டு மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது ஆப்கானிஸ்தான் (காடு) நாடு ஆகும். உலகிலேயே மிக உயர்ந்தது மனித மாண்பு. ஆனால் அதனை துளியும் உணராத, மதிக்காத மா(ம)க்கள் கூட்டம் அங்கே இருப்பது நமக்கு வியப்பையும், வெறுப்பையும் அளிக்கிறது. தாலிபான்கள் அனைவரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களோ? என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

**பெண்கள் மீதான தா-பான்களின் அடக்கு முறைகளில் சில:**

- பெண்கள் மெதுவாக பேச வேண்டும். பெண்கள் பேசுவது வெளி ஆண்களுக்கு கேட்க கூடாது.
- பெண்கள் நடக்கும் போது சத்தம் வரக்கூடாது, ஹை ஹீல்ஸ் மற்றும் ஷூ அணியக் கூடாது.
- பெண்கள் வீட்டுக்குள்தான் இருக்க வேண்டும், பால்கனிக்கு வரக்கூடாது.
- நாளிதழ், புத்தகங்கள் விளம்பரங்களின் பெண்களின் படங்கள் இடம் பெறக் கூடாது.
- விதிகளை மீறினால் பொது இடங்களில் கசையடி, மரணதண்டனை வழங்கப்படும்.
- பெண்கள் கல்வி கற்க தடை, வேலைக்குச் செல்ல தடை.
- புர்கா அணியாமல் பெண்கள் வெளியே வரக் கூடாது. பெண்களை புகைப்படம் எடுக்கக் கூடாது.
- பெண்கள் மேக்கப் செய்துகொள்ளக் கூடாது, நெயில் பாலீஷ் போடக் கூடாது. நக பூச்சு (நெயில் பாலீஷ்) போட்டால் கை இருக்காது.
- வீடு வீடாகச் சென்று இளம்பெண்களை சல்லடைப் போட்டு தேடுகின்றனர், அழகாக இருந்தால் தூக்கிச் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர்.
- பெண்கள் தனியாக டாக்ஸியில் வெளியில் சென்றால் அவர்களுக்கு கசையடி உண்டு, டாக்ஸி உரிமையாளரின் லைசென்ஸ் பறிக்கப்படும்.
- பெண்களுக்கென்று முழுவதும் திரையால் மூடப்பட்ட தனி பேருந்துகள் உண்டு, வெளியில் இருப்பவர்கள் யாரும் உள்ளே பெண்கள் அமர்ந்திருப்பதை பார்க்க கூடாது.
- வீட்டின் தரைத்தளம், மற்றும் முதல் தளத்தில் இருப்பவர்கள் வீட்டுக்குள் பெண்கள் இருப்பது தெரியாத அளவுக்கு ஜன்னல்களை திரைகள் போட்டு மூட வேண்டும்.
- பெண்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது: சரீபா கபாரி எனும் பெண் ஆப்கானில் வர்தாக் மாகாணத்தில் மேயராக வெற்றிபெற்றார். இதுவரை 3 முறை தாலிபான்கள் அவரைக் கொல்ல முயற்சித்துள்ளனர், கடந்த ஆண்டு அவருடைய தந்தையை தாலிபான்கள் சுட்டுக் கொன்றுவிட்டனர்.

**தா-பான்களின் கொடூர முகம்**

- ஆப்கன் உடை அணியாத இளைஞர்கள் தாக்கப்பட்டனர், 2 பேர் மட்டும் தப்பிய நிலையில் மற்றவர்கள் கொல்லப்பட்டனர்.
- ஆப்கன் நாளிதழைச் சார்ந்த 2 பத்திரிக்கையாளர்கள் டி-ஷர்ட், ஜீன்ஸ் அணிந்திருந்ததால் தாக்கப்பட்டனர். எந்த ஆடையை அணிய வேண்டும் என்று தாங்கள் தான் முடிவு செய்வோம் என்று தாலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் (காட்டில்) நாட்டில் இப்படி மனநலம் பாதிக்கப்பட்டு, வளர்ச்சியடையாத கற்காலத்தில் இருப்பவர்களை, மனிதர்கள் என்பதா? இல்லை மிருகங்கள் என்பதா? மனித மிருகங்கள் என்பதே மிக பொருத்தமாகும்.

**செய்தித் துளிகள்: தினகரன் 30.08.2021**

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு:**

சர்வவியாபி ஆண்டு சந்தா 2021-2022 க்கான சந்தா ரூபாய் 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து ஆதரவு அளித்து சந்தாவை புதுப்பித்துக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

- ***ஆசிரியர்.***

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.